# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2017 யூலை

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

பெரும்பாலும் பாடத்தின் சகல பரப்புகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற AA1 மட்டத்தின் ''வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்'' வினாப்பத்திரத்தின் நோக்கம், பாடப் பரப்புகள் மீதான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த அறிவையும் விளங்கிக்கொண்ட தன்மையினையும் பரீட்சிப்பதாக இருந்தது. பரீட்சகரின் அறிக்கையினுடைய பிரதான நோக்கம், எதிர்காலப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பரீட்சார்த்திகளால் குறைவான புள்ளிகள் பெறப்பட்ட பாடப் பரப்புகள் மீது கவனத்தைச் செலுத்துவதாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தமையை இங்கு காணக்கூடியதாக இருந்தது. வேறு வகையில் கூறுவதாயின் பின்வரும் குறைபாடுகள் காரணமாக சில பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ளவில்லை என்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட விடைகளை அளிக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது:

## <u>பகுதி A</u>

### வினா இல. 01

மொத்தமாகவுள்ள 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்தின் சகல பரப்புகளும் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இப்பகுதிக்குக் குறிப்பிடத்தக்களவு வீதமான பரீட்சார்த்திகள் விடையளிதது உயர் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இல. **1.3, 1.7, 1.8** மற்றும் **1.20** ஆகியவற்றுக்கு வெற்றிகரமான முறையில் விடையளித்திருக்கவில்லை. அவை பற்றிய அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன:

**1.3** இங்கு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ''கம்பனி ஒன்றைப் பதிவுசெய்வதற்குத் தேவைப்படும் ஆவணங்கள்'' பற்றிய சரியான புரிதல்களை அளவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் சரியான விடையான விடை இல. 4 இல் தரப்பட்ட *''கம்பனியின் வங்கிக் கூற்று''* என்பதற்குப் பதிலாக விடை இல. 2 ஆன *''தொடக்கச் செயலாளரின் ஒப்புதல் கூற்று''* என்பதைத் தெரிவுசெய்திருந்தனர். இங்கு கம்பனி ஒன்றைத் தெரிவுசெய்வதற்குத் **தேவைப்படாத** ஆவணம் எதுவென்றே கேட்கப் பட்டிருந்தது. எனவே அவர்கள் பதிவுடன் சம்பந்தப்படாத ஆவணத்தையே தெரிவுசெய்ய வேண்டும் என்பதைப் பலர் விளங்கிக்கொண்டிருக்கவில்லை.

**1.7** ஹென்றி மின்ஸ்பேக் இன் கூற்றுப்படி தரப்பட்ட விடைகளிலிருந்து முகாமையாளர் ஒருவருடன் சம்பந்தமற்ற வகிபாகத்தைத் தெரிவுசெய்யுமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது. ஆயினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் இருந்த ''வகிபாகமாக **அமையாதது**'' என்ற சொல்லைக் கருத்திலெடுக்காது சரியான விடையான இல. 3 எண்ணக்கரு சார்ந்த வகிபாகம் என்பதற்குப் பதிலாக பிழையான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர். எனவே, விடை அளிப்பதற்கு முன் வினாவை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்வது முக்கியமானதாகும்.

**1.8** பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் தரவுக்கும் தகவலுக்குமிடையிலான வேறுபாடு பற்றிய அறிவு காணப்படவில்லை. எனவே, தரப்பட்ட உதாரணங்களிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்ய அவர்களால் இயலாமற் போயிருந்தது.

**1.20** அதிகளவான பரீட்சார்த்திகளிடம் தர முகாமைத்துவ முறைமையின் தேவைப்பாடுகள் பற்றிய எவ்வித யோசனைகளும் காணப்படவில்லை. தரச் சான்றிதழ்கள் மற்றும் வர்த்தகச் சூழலின் வேறு புதிய போக்குகள் பற்றிய தெளிவானதும் தீர்மானமிக்கதுமான அறிவை விருத்திசெய்து கொள்வது முக்கியமானதாகும்.

இல. 1.1 தொடக்கம் 1.15 வரையான வினாக்களுக்காகத் தெரிவுசெய்யப்படும் விடைகளின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் குறிப்பிடுமாறு தெளிவாகக் கூறப்பட்டிருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் வினாவுக்குரிய விடை இலக்கத்தைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக விடையினை முழுமையாக எழுதியிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. இது ஏனைய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்து நேரத்தை வீணடிப்பதாக அமைகிறது.

பரீட்சார்த்திகள் வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான அவர்களது அறிவினை மேம்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். மேலுள்ள வினாக்களைத் தவிர ஏனைய வினாக்களுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாக விடை அளித்திருந்தனர். வினா இல. 01 இற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

## <u>பகுதி B</u>

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 4 கட்டாய வினாக்களை உள்ளடக்கியது.

## வினா இல. 02

இவ்வினா **வியாபார நிறுவனங்கள்** மற்றும் **ஆதரவுச் சேவைகளை** அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(a)** இப்பகுதியில் தனியுரிமை வியாபாரம் ஒன்றின் மூன்று பண்பியல்புகளை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித் திருந்ததுடன் திருப்திகரமான அளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பல பரீட்சார்த்திகள் இவ்வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பது பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. அவர்களில் சிலர் பண்பியல்புகளை எழுதுவதற்குப் பதிலாக ஏனைய வகை வியாபார நிறுவனங்களை விட ஒரு தனியுரிமை வியாபாரத்தில் காணப்படும் அனுகூலங்கள் பற்றி விபரித்திருந்தனர்.

**(b)** இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்த பரீட்சார்த்திகளில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றிய விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் வியாபார நிறுவனம் ஒன்றுக்கு காப்புறுதியின் முக்கியத்துவத்தை விபரிப்பதற்குப் பதிலாக ‘‘காப்புறுதி’’ என்னும் பதத்தினைப் பொருள் வரையறை செய்து, காப்புறுதியின் வகைகளை விபரித்திருந்தனர். வினாவை விளங்கிக்கொண்ட பரீட்சார்த்திகள் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

## வினா இல. 03

இங்கு வியாபாரச் சூழல் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**(a)** **(i)** மிகச் சொற்பளவிலான பரீட்சார்த்திகளே இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகள் சிலரிடம் இவ்வினாவில் என்ன எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்பது பற்றிய தெளிவான விளக்கம் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் அகச் சூழலை புறச் சூழலுடன் குழப்பியடித்து நுண்பாகச் சூழல் மற்றும் பேரினச் சூழல் போன்ற பிழையான விடைகளை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் அகச் சூழலின் கூறுகளாக வழங்குநர்கள், வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள் போன்ற நாட்டதாரர்களைப் பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**(ii)** இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சித்திருந்தவர்களில், சில பரீட்சார்த்திகள் நுண்பாகச் சூழலுக்கும் பேரினச் சூழலுக்குமிடையிலான வேறுபாடுகளை விளங்கிக்கொள்ளாது விடையளித்திருந்தனர். அவர்கள் நுண்பாகச் சூழலுக்கும் பேரினச் சூழலுக்குமிடையிலான வேறுபாட்டை அடையாளம் காண்பதற்குப் பதிலாக நுண்பாகச் சூழல் மற்றும் பேரினச் சூழல் ஆகியவற்றைத் தனித்தனியாக பொருள் வரையறை செய்திருந்தனர். சிலர் நுண்பாகச் சூழலையும் பேரினச் சூழலையும் குழப்பியடித்திருந்ததன் விளைவாக பிழையான விடைகளை வழங்கியிருந்தனர்.

**(b)** பல பரீட்சார்த்திகள் போட்டரின் ஐந்து படைகள் மாதிரியிலுள்ள புதிய பிரவேசிப்பாளர்களின் அச்சுறுத்தல், வழங்குநர்களின் விலைபேசல் வலு, வாங்குவோரின் விலைபேசல் வலு, ஏற்கனவேயுள்ள போட்டியாளர்கள் மத்தியிலிருக்கும் போட்டித்தன்மை, சேவைகளின் பிரதியீட்டுப் பொருட்களது அச்சுறுத்தல் ஆகியவற்றிலிருந்து 2 படைகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் போட்டரின் ஐந்து படைகள் மாதிரியிலிருந்து அவர்களால் குறிப்பிடப்பட்ட படைகள் பற்றிச் சரியாக விபரிப்பதற்குத் தவறியிருந்தனர். கற்றல் பொதிகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட வாசிப்பு புத்தகங்களை வாசித்து விளங்கிக்கொள்வதன் மூலம் வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்துடன் தொடர்புபட்ட மாதிரிகள் பற்றிய ஆழமான அறிவினை விருத்திசெய்து கொள்வது முக்கியமானதாகும்.

மிகவும் சொற்பளவிலான மாணவர்களாலேயே முழு வினாவுக்குமான புள்ளிகளில் கூடிய புள்ளிகளைப் பெறமுடிந்திருந்தது.

## வினா இல. 04

**மனித வள முகாமைத்துவத்தின்** கீழான ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவுசெய்தல் ஆகியவை பற்றிய அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது.

**(a)** **(i)** அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக எதிர்பார்க்கப்பட்ட விடைகளை எழுதியிருக்கவில்லை. அவர்கள் வேறுபாடுகளை விபரிப்பதற்காக ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவுசெய்தல் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சரியாக அடையாளங் கண்டிராததால் அவர்கள் அவ்விரு தொழிற்பாடுகளினதும் பண்பியல்புகள் பற்றி விபரித்திருந்தனர். ஆயினும் ஒரு சில பரீட்சார்த்திகள் உரிய விடயங்களை எழுதியிருந்ததுடன் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளில் அதிகமானவற்றைப் பெற்றிருந்தனர்.

**(ii)** 10 புள்ளிகளில் இப்பகுதிக்காக 4 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்த பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் தெரிவுச் செயன்முறையை உற்பத்திச் செயன்முறையுடன் குழப்பியடித்திருந்ததன் காரணமாக சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

**(b)** இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சித்திருந்தவர்களில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் உள்ளக ஆட்சேர்ப்புடன் வெளிவாரி ஆட்சேர்ப்பின் அனுகூலங்களை ஒப்பிடாது வெளிவாரி ஆட்சேர்ப்பினது அனுகூலங்களைத் தனித்து எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் உள்ளக ஆட்சேர்ப்பை விட வெளிவாரி ஆட்சேர்ப்பில் காணப்படும் அனுகூலங்களைக் குறிப்பிடாது உள்ளக மற்றும் வெளிவாரி ஆட்சேர்ப்பு ஆகிய இரண்டினதும் பண்பியல்புகளைக் குறிப்பிட்டிருந்தனர். எனவே வினாவுக்கு விடையளிப்பதற்கு முன் வினாவினை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

பரீட்சார்த்திகள் சுயகற்றல் புத்தகத்திலிருக்கும் ''மனித வள முகாமைத்துவம்'' அத்தியாயத்தில் முறையான கவனத்தைச் செலுத்திப் படித்திருப்பின் இவ்வானாவுக்காக கூடிய புள்ளிகளை பெற்றிருக்க முடிந்திருக்கும்.

## வினா இல. 05

இவ்வினா **சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தை** அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(a)** வினாவின் இப்பகுதியில் தேவைகள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை இவ்விரு உதாரணங்களுடன் குறிப்பிடுமாறு கோரப்பட்டிருந்ததுடன் இதற்காக மொத்தமாகவுள்ள 10 புள்ளிகளில் 4 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு எதிர்பார்க்கப்பட்டவாறு வெற்றிகரமான விடைகளை உதாரணங் களுடன் வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தேவைகள் மற்றும் விருப்பங்கள் ஆகிய இரு பதங்களையும் தனித்தனியாகப் பொருள் வரையறை செய்திருந்தபோதிலும் அவ்விரண்டிற்கு மிடையிலான வேறுபாடுகளை அடையாளம் காணத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கிடையிலான வேறுபாட்டை எழுதியிருந்தனராயினும் அவ்வொவ்வொன்றுக்கும் இவ்விரு உதாரணங்களை எழுதுவதற்குத் தவறியிருந்தனர்.

**(b)** இப்பகுதியில் சந்தைத் துண்டமாக்கலின் பண்பியல்புகள் மூன்றை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்காததால் இதற்கான 6 புள்ளிகளில் மிகக் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிகூடச் செய்திருக்கவில்லை. பல பரீட்சார்த்திகள் அளவிடக்கூடியது, கணிசமானளவுடையது, அணுகக்கூடியது, வேறுபடுத்தக்கூடியது செயற்படக்கூடியது போன்ற பயனுறுதிமிக்க சந்தைத் துண்டமாக்கலின் பண்பியல்புகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும் அவர்களில் பலர் அவற்றைச் சரியாக விபரிக்கத் தவறியிருந்ததன் காரணமாக குறைந்தளவான புள்ளிகளையே பெற்றனர்.

பரீட்சார்த்திகள் சுய கற்றல் புத்தகத்திலிருக்கின்ற சந்தைத் துண்டமாக்கலின் உள்ளடக்கத்தைப் படித்திருப்பின் இவ்வினாவுக்கான முழுப்புள்ளிகளையும் இலகுவாகப் பெற முடிந்திருக்கும்.

## பகுதி C

இப்பகுதி 20 புள்ளிகளைக் கொண்ட 1 கட்டாய வினாவைக் கொண்டிருந்தது.

## வினா இல. 06

இது ''**அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.''** தொடர்பான விவரண அடிப்படையிலான ஒரு வினாவாகும். இங்கு தொழிற்பாட்டு முகாமைத்துவம், மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் வெளிமூலமிடல் ஆகியவை பற்றிய அறிவினைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவை நன்கு வாசிக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான 20 புள்ளிகளில் அதிகளவான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(a)** பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் புதிதாக விருத்திசெய்யப்பட்ட இயந்திரத்தின் அறிமுகப்படுத்தல் தொடர்பில் **APP** இனால் எதிர்நோக்கப்பட்ட பிரதான பிரச்சினைகளை விபரித்திருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் நடைமுறைக் களத்தில் தரப்பட்ட விவரணத்துடன் அவற்றைத் தொடர்புபடுத்தாது கோட்பாட்டு ரீதியான உண்மைகளை மீள சமர்ப்பிப்புச் செய்திருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** இப்பகுதியில் புதிய பொருள் வடிவமைப்புச் செயன்முறை தொடர்பான அறிவினைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் வினாவை நன்கு விளங்கிக் கொள்ளாததால் எதிர்பார்க்கப்பட்ட விடைகளை வழங்கியிருக்கவில்லை. அவர்கள் பொருள் வடிவமைப்புச் செயன்முறைக்குப் பதிலாக முகாமைத்துவத்தின் அடிப்படை எண்ணக்கருக்களை விபரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குச் சரியான விடைகளை எழுதியிருந்ததுடன் இதற்கான 6 புள்ளிகளில் திருப்திகரமான அளவுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். புதிய பொருள் வடிவமைப்புச் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட படிநிலைகளாக சிந்தனைப் பிறப்பாக்கம், சாத்தியவள ஆய்வு, மாதிரி வடிவமைப்பு, திசைமுகப்படுத்தல் ஓட்டம் மற்றும் இறுதிச் சோதனைகள் அத்துடன் புதிய பொருளின் அறிமுகம் என்பன காணப்படுகின்றன என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

**(c)** இப்பகுதியில் பயனுறுதிமிக்க வெகுமதி முறைமை ஒன்றின் நோக்கங்களை எழுதுமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளத் தவறியிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடை எழுதியிருக்கவில்லை. இவர்களில் பலர் பயனுறுதிமிக்க வெகுமதி முறைமையின் நோக்கங்களை எழுதுவதற்குப் பதிலாக நிறுவனம் ஒன்றிற்கான வெகுமதி முறைமை ஒன்றின் நன்மைகளை எழுதியிருந்தனர்.

**(d)** அரைவாசிக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் வினாவை நன்றாக விளங்கிக்கொள்ளாது சந்தை ஆய்வை வெளிமூலமிடுவதன் ஊடாக அடையப்படும் நன்மைகளை குறிப்பிடுவதற்குப் பதிலாக சந்தை ஆய்வை நடத்துவதன் ஊடாக அடையப்படும் நன்மைகளைப் பட்டியலிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வெளிமூலமிடுவதன் மூலம் சந்தை ஆய்வை நடத்துவதால் ஏற்படும் நன்மைகளை குறிப்பிடுவதற்குப் பதிலாக சந்தை ஆய்வொன்றை நடத்துவதன் நிதி மூலங்களைப் பட்டியலிட்டிருந்தனர். பரீட்சார்த்திகள் வியாபாரத் தொழிற்பாடுகளின் வெளிமூலமிடல் மற்றும் ஏனைய தொழினுட்பப் பிரயோகங்கள் தொடர்பான கோட்பாட்டு ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான அம்சங்கள் மீது தமது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் கடந்தகால வினாப்பத்திரங்களில் உள்ள இதேபோன்ற வினாக்களில் பயிற்சி பெற்றிருப்பின், அவர்களால் விவரண அடிப்படையிலமைந்த இவ்வகை வினாக்களுக்கு கூடிய புள்ளிகளைப் பெற்றிருக்க முடியும்.

\- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். வினாப்பத்திரத்திலேயே விடை எழுத வேண்டாம்.

2. இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட சுய கற்றல் புத்தகம் முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்க.

3. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

4. பரீட்சை எழுதும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.

5. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

7. வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.

9. அறிவினை நிகழ்நிலைப்படுத்திக்கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.

10. கட்டாய வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

11. நல்ல முன்னாயத்தத்துடன் பெரும்பாலும் பரீட்சையில் சித்தியடையும் நம்பிக்கையுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -